


முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (29.11.2023) தலைமைச் செயலகத்தில், பழ.அதியமான் அவர்கள் எழுதிய “வைக்கம் போராட்டம்” நூலின் கன்னட மொழிபெயர்ப்பு நூலினை வெளியிட, திராவிடர் கழகத் தலைவர் ஆசிரியர் கி.வீரமணி அவர்கள் பெற்றுக் கொண்டார். இந்த நிகழ்ச்சியில், பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி, தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா, பள்ளிக்கல்வித் துறை செயலாளர் ஜெ.குமரகுருபரன், வைக்கம் போராட்டம் நூல் ஆசிரியர் எழுத்தாளர் பழ.அதியமான், தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழக மேலாண்மை இயக்குநர் திருமதி. இரா.கஜலட்சுமி, மொழிபெயர்ப்புப் பிரிவு இணை இயக்குநர் டாக்டர். சங்கர சரவணன் ஆகியோர் கலந்து கொண்டனர்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (29.11.2023) தலைமைச் செயலகத்தில், பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை சார்பில் 12 கோடியே 54 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் நலக் கல்லூரி மாணவ, மாணவியருக்கான 5 விடுதிக் கட்டடங்களையும் மற்றும் 2 கள்ளர் சீரமைப்புப் பள்ளிகளில் 6 கோடியே 52 இலட்சம் ரூபாய் செலவில் உட்கட்டமைப்பு பணிகள் நிறைவுற்ற பள்ளிக் கட்டடங்களையும் திறந்து வைத்தார். இந்த நிகழ்ச்சியில், பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் ஆர்.எஸ்.ராஜகண்ணப்பன், தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா, பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை செயலாளர் திருமதி. ரீட்டா ஹரீஷ் தக்கர், பிற்படுத்தப்பட்டோர் நல ஆணையர் அனில் மேஷ்ராம், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நல ஆணையர் வா.சம்பத் ஆகியோர் கலந்து கொண்டனர்.







முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (29.11.2023) முகாம் அலுவலகத்தில் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் 2 புதிய வால்வோ சொகுசு சுற்றுலா பேருந்துகளின் பயன்பாட்டினை தொடங்கி வைக்கும் விதமாக, சென்னை, செங்கல்பட்டு மற்றும் திருவள்ளூர் மாவட்டங்களில் அரசு சிறப்பு பள்ளிகளில் பயிலும் 60 மாற்றுத்திறனாளி மாணவ, மாணவிகள் மாமல்லபுரத்திற்கு சுற்றுலா பயணம் மேற்கொள்ள அச்சுற்றுலா பேருந்துகளை கொடியசைத்து தொடங்கி வைத்து, மாணவ, மாணவிகளுக்கு சிற்றுண்டிகள் வழங்கி வழியனுப்பி வைத்தார்.

### மக்கள் தொடர்புத் திட்ட முகாம்களில்

# 286 பயனாளிகளுக்கு ரூ.66.10 லட்சம் மதிப்பீட்டில் நலத்திட்ட உதவிகள்!

## கே.ஆர்.என்.ராஜேஸ்குமார் எம்.பி. வழங்கினார்!

நாமக்கல், டிச. 1 -

நாமக்கல் மாவட்டம், இராசிபுரம் வட்டம், தொப்பப்பட்டி கிராமம், நாமக்கல் வட்டம், ஏளூர் கிராமம், மோகனூர் வட்டம், அணியாபுரம் ஆகிய இடங்களில் மக்கள் தொடர்பு திட்ட முகாம் நடைபெற்றது. மாவட்ட வருவாய் அலுவலர் மருத்துவர் ரெ.சுமன் தலைமை தாங்கினார். சேந்தமங்கலம் சட்டமன்ற உறுப்பினர் கு.பொன்னுசாமி முன்னிலை வகித்தார்.

நாமக்கல் கிழக்கு மாவட்டக் கழக செயலாளரும், மாநிலங்களவை உறுப்பினருமான கே.ஆர்.என்.இராஜேஸ்குமார் கலந்து கொண்டு பல்வேறு அரசு துறைகளின் சார்பில் 286 பயனாளிகளுக்கு ரூ.66.10 லட்சம் மதிப்பீட்டில் அரசு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில் கே.ஆர்.என்.இராஜேஸ்குமார் தெரிவித்ததாவது: தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்ற பிறகு தேர்தல் நேரத்தில் அறிவித்த வாக்குறுதிகளை நிறைவேற்றி வருகிறார்கள். குறிப்பாக அனைத்து குடும்ப அட்டைதாரர்களுக்கும் கொரோனா நிவாரண நிதியாக 4 ஆயிரம் ரூபாய், மகளிர் அனைவரும் இலவச பேருந்து பயணம், மகளிர் சுய உதவிக் குழுக்கள் கடன் தள்ளுபடி, நகை கடன் தள்ளுபடி உள்ளிட்ட பல்வேறு வாக்குறுதிகளையும் முதலமைச்சர் அவர்கள் நிறைவேற்றியுள்ளார்.

குடும்பத்திற்காக அயராது உழைத்துக் கொண்டிருக்கும் பெண்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தி, வாழ்க்கைத் தரத்தை உயர்த்தி, சமூகத்தில் சுயமரியாதையோடு வாழ்வதற்கு வழிவகுக்க வேண்டும் என்ற சீரிய நோக்கத்திற்காக குடும்பத் தலைவிகளுக்கு மாதம் ரூ.1000/ உரிமைத் தொகையாக வழங்கிட தமிழ்நாடு அரசால் ‘கலைஞர் மகளிர் உரிமைத்திட்டத்தை தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் செயல்படுத்தி வருகிறார். விண்ணப்பதாரர்களின் விண்ணப்ப முடிவு நிலை குறித்த குறுஞ்செய்தி விண்ணப்பதார்களின் பதிவு செய்யப்பட்ட கைபேசி எண்ணிற்கு அனுப்பப்பட்டு வருகிறது. இவ்வாறு ஏற்கப்படாத விண்ணப்பதாரர்கள் மேல்முறையீடு செய்ய விரும்பினால், குறுஞ்செய்தி பெறப்பட்ட நாளிலிருந்து 30 நாட்களுக்குள் இ-சேவை மையம் வழியாக வருவாய் கோட்டாட்சியருக்கு மேல்முறையீடு செய்யலாம். மேல்முறையீட்டு விண்ணப்பங்கள் 30 நாட்களுக்குள் தீர்வு செய்யப்படும். எனவே தகுதியுள்ள அனைவருக்கும் கலைஞர் மகளிர் உரிமைத் தொகை கிடைக்கும். அதோடு மட்டுமல்லாமல் இத்திட்டம் என்பது ஒரு தொடர் திட்டம் என்பதால் வருடந்தோறும் தகுதியுள்ள அனைவரும் விண்ணப்பிக்கலாம்.

நாமக்கல் மாவட்டத்தில் ஒவ்வொரு மாதமும் இரண்டாம் புதன்கிழமை வட்ட அளவில் ஒரு கிராமத்தினை தேர்வு செய்து மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களால் மக்கள் தொடர்பு திட்ட முகாம் சிறப்பாக நடத்தப்பட்டு வருகிறது.

நாமக்கல் மாவட்டத்தில் பொதுமக்களின் குறைகளை களைய ஒவ்வொரு மாதமும் நான்காவது புதன்கிழமை வட்ட அளவில் ஒரு கிராமத்தை தேர்வு செய்து மக்கள் தொடர்பு திட்ட முகாம் நடத்தப்பட்டு வருகிறது. அந்த வகையில் இன்றைய தினம் இராசிபுரம் வட்டம், தொப்பப்பட்டி கிராமம், நாமக்கல் வட்டம், ஏளூர் கிராமம், மோகனூர் வட்டம், அணியாபுரம் ஆகிய இடங்களில் சிறப்பாக நடைபெற்று வருகிறது. இம்முகாமில் பொதுமக்கள் வழங்கும் கோரிக்கை மனுக்கள் மீது உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு அதற்கான தீர்வுகளும் இந்த முகாம் வாயிலாக வழங்கப்படுகிறது. எனவே கோரிக்கை மனுக்களை வழங்கும் போது பொதுமக்கள் தங்களின் தொலைபேசி எண்ணுடன் முழு விவரங்களை தெரிவிக்க வேண்டும் என கே.ஆர்.என். இராஜேஸ்குமார் எம்.பி தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் கே.பி.இராமசாமி, மாவட்ட வழங்கல் அலுவலர் த.முத்துராமலிங்கம், மோகனூர் கூட்டுறவு சர்க்கரை ஆலை வடிப்பக அலுவலர் சுரேந்திரன், மோகனூர் ஒன்றிய செயலாளர் நவலடி, வட்டாட்சியர்கள் சரவணன் (இராசிபுரம்), சக்திவேல் (நாமக்கல்), மணிகண்டன் (மோகனூர்) உள்ளாட்சி பிரதிநிதிகள், அரசு அலுவலர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.



சேலம் மாவட்டம் பெத்தநாயக்கன்பாளையத்தில் வருகிற டிசம்பர் 17ஆம் தேதி தி.மு.க.வின் இளைஞர் அணி இரண்டாவது மாநில மாநாடு நடைபெறுவதை ஒட்டி தமிழ்நாடு மாநாட்டின் ஒருங்கிணைப்பாளரும் தி.மு.க. முதன்மைச் செயலாளரும் தமிழ்நாடு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சருமான கே.என்.நேரு தலைமையில் தமிழ்நாடு கூடுதல் டி.ஜி.பி. அருண், கோவை சரக ஐ.ஜி ராஜேஷ் கண்ணா, சேலம் சரக டிஐஜி ராஜேஸ்வரி உள்ளிட்ட காவல்துறை அதிகாரிகள் மாநாட்டு பந்தல் திடல், அருகில் முதலமைச்சர் செல்லும் சாலையை ஆய்வு செய்தனர். இதில் மாநாட்டு திடலில் இருந்து ஏத்தாப்பூர் பேரூராட்சியிலுள்ள முருகன் கோவில் வழியாக செல்லும் சாலைகளை நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு செய்தனர், உடன் சேலம் மாவட்ட ஆட்சியர் கார்மேகம், சேலம் மாவட்ட எஸ்.பி. அருண் கபிலன், சேலம் கிழக்கு மாவட்ட தி.மு.க. செயலாளர் எஸ்.ஆர்.சிவலிங்கம், சேலம் மத்திய மாவட்ட தி.மு.க. செயலாளர் இரா.ராஜேந்திரன் எம்.எல்.ஏ. உள்பட பலர் உடன் இருந்தனர்.